பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ, எம்.பி.

ஊர்: 15] சென்னை: ஆனி 30உ (14—7—67) வெள்ளி ★ வெளியூர்: ஆனி 31உ (15—7—67) சனி [இதழ்: 26

திட்டக் குழு சீரமைப்பு

தலைமையமைச்சர் இந்திரா காந்தியைத் தலைவராகவும், பேராசிரியர் டி. ஆர். காட்கில் துணைத் தலைவராகவும் கொண்டு திட்டக் குழு இனி இயங்கும்.

தமிழக முன்னாள் தொழிலமைச்சர் ஆர். வெங்கட்ராமன் திட்டக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

"திட்டக் குழு, தனித் தலைவர் ஒருவரையும், 5 உறுப்பினர்களையும் கொண்டதாக இயங்க வேண்டும்" என்று, நிர்வாகச் சீர்திருத்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

ஸ்டேட் பாங்கி ஊழியர் உண்ணாநோன்பு

தமிழக பாங்கி ஊழியர் ஆதரவு

சென்னை, சூலை 14—சட்டமன்றத்தில் நேற்று முன்தினம், சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் சுட்டுக் காட்டிய 'ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்' என்ற நில்மையை, நேற்று சென்னைக் கடற்கரைச் சாலையில் ஸ்டேட் பாங்கியின் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டம் விளக்கியது.

இப்போது நடைமுறையில் தாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் உரிமைகள் நிர்வாகம் பறிப்பது கூடாது என்று கோரி கடந்த 28 நாட்களாக ஸ்டேட் பாங்கி ஊழியர்—துணை ஊழியர் சங்கத் தோழர்கள் உண்ணாநோன்பு இருந்துவருகிறார்கள். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், சென்னையிலுள்ள எல்லா பாங்கி ஊழியர்களும், தமிழ்நாடு பாங்கி ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் இட்டத்தட்ட 2,000 பேர் அணி திரண்டு—நிர்வாகப் போக்கை எதிர்த்து ஸ்டேட் பாங்கியின் வாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்ட முடிவில் தமிழ்நாடு பாங்கி ஊழியர் சம்மேளனப் பொதுச்செயலாளர் தோழர் என். சம்பத், நிலைமைகளை விளக்கி உரையாற்றினார்.

ஸ்டேட் பாங்கியைச் சேர்ந்த திரு. வி. எஸ். பாலசுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார்.

நேற்று உண்ணாநோன்பு இருந்த தோழர்கள் வி. எஸ். ஏகாம்பரம், கோவிந்தசாமி ஆகியோருக்கு ஏராளமான மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

உண்ணாநோன்பின் 28-ம் நாளை நினைவுபடுத்தும் வகையில் 28 சூரியக்கதிர்கொண்ட மாலை ஒன்றும் அணிவிக்கப்பட்டது.

காந்தியார் கூற்றும் காங்கிரசு அமைச்சர்களும்

பொதுப் பணத்தில் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டமா?

மக்களவையில் கிருபாளனி கண்டனம்

புதுடில்லி, சூலை 13—

"'தமது சொந்தப் பணமாக இருந்தால் அதனை ஒருவர் எந்த முறையில் செலவிடுவாரோ, அதைப்போலவே பொதுப் பணத்தைச் செலவிட வேண்டும்' என்று காந்தியார் சொன்னதன் உட்பொருளை விட்டுவிட்டு, முழுக்க முழுக்க நேர்ப் பொருளாக் கொண்டுவிட்டனர் நமது அரசினர்"

என்று திரு. ஜே. பி. கிருபளானி, இன்று மக்களவையில் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

உணவுத் துறை மானியக் கோரிக்கைமீது பேசிய திரு. கிருபளானி, அரசினரால் பொதுப் பணம் எத்தெத்த வகையிலெல்லாம் விரயமாக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்.

"பொதுத் துறை நிறுவனங்களான கூட்டுறவு அமைப்புகள்கூட, அமைச்சர்களின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடுகின்றன; அமைச்சர்களுக்குப் பணமுடிப்புக்கள் கொடுக்கவும் முன்வருகின்றன.

"ஒரு சமயம், கூட்டுறவு நிறுவனம் ஒன்று, தலைமையமைச்சருக்கே ஓர் இலட்சம் ரூபாய் கொடுக்க முன்வந்த நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது."

"இந்த அரசு, பொதுப் பணத்தை தனது சொந்தப் பணமாகவே பயன்படுத்து இறது" என்றார் அவர்.

மதுவிலக்குக்கொள்கை

உருவாக்கும் எண்ணத்தை மத்திய அரசு கைவிடும்?

புதுடில்லி, சூலை 13—மத்தியப் பிரதேசத்தில் சில மாவட்டங்களில் மதுவிலக்கை நீக்க முயற்சி செய்ததானும், அதே வழியில் செயல்பட மைசூர் அரசும் தீர்மானித்திருப்பதானும், மதுவிலக்குக் கொள்கையை உருவாக்கும் எண்ணத்தை இப்போதைக்கு கைவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு மத்திய அரசு வந்துவிட்டதாகத் தெரிகிறது.

கேரளாவும், அரியானுவும் முதலில் மதுவிலக்கை நீக்கின. மத்தியப் பிரதேசம் இப்போது அந்த முடிவை மேற்கொண்டுவிட்டது.

இந்த நிலையில் தேக் சந்த் குழு கூறிய யோசனைப்படி 1970-க்குள் மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவருவது இயலாது எனக் கருதப்படுகிறது.

மருத்துவமனை--மாணவர்விடுதிகட்கு படி அரிசித் திட்டம்

உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆணை

சட்டமன்றத்தில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு

சென்னை, சூலை 14—

சட்டபூர்வமான பங்கீட்டுமுறை செயலில் உள்ள பகுதிகளில் இருக்கும் மருத்துவ விடுதிகள், மாணவர் விடுதிகள், அனுதை இல்லங்கள் ஆகியவற்றிற்கு, படி அரிசித் திட்டம் உடனடியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலே உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இன்று சட்டமன்றத்தில் வெளியிட்டார்.

சட்டமன்ற 41-வது விதியின்கீழ், இன்று கழக உறுப்பினர் திரு. ஏ. எம். இராசர, பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புப் பிரச்சினையொன்றைக் கொண்டுவந்தார்.

அதற்கு விளக்கமளிக்கும் வகையில், உணவமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் பின்வரும் தகவலைத் தெரிவித்தார் :—

"கடந்த 10—7—67-ஆம் நாள் அரசு பிறப்பித்துள்ள ஆணையின்படி (அரசு ஆணை எண் 787) சட்டபூர்வமான பங்கீட்டுமுறை செயலில் உள்ள சென்னை, கோவை ஆகிய நகரங்களில் இருக்கும் அரசின் கலவி நிறுவனங்கள்— தனியார் துறைக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்துள்ள மாணவர் விடுதிகளுக்கும், தாழ்த்தப்பட்டோர் நலத் துறையால் நடத்தப்பட்டு வருகின்ற மாணவ—மாணவியர் விடுதிகளுக்கும், அறநிறுவனங்களால் நடத்தப்படும் அனுதை விடுதிகட்கும், மற்றும் மருத்துவமனைகட்கும், கிலோ 66 காசுக்கு மேற்படாத பச்சரிசியோ புழுங்கலரிசியோ பங்கீட்டு அடிப்படையில் வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

"இந்த ஆணை உடனடியாக (10—7—67 முதல்) செயல்படுத்தப்பட வேண்டும்."

தூத்துக்குடி துறைமுகம்

மத்தியப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் வற்புறுத்தல்

புதுடில்லி, சூலை 13—தூத்துக்குடித் துறைமுகத்தை ஒரு ஆழ்கடல் துறைமுகமாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய போக்குவரத்து அமைச்சகம் மத்திய அமைச்சரவைக்கு சிபாரிசு செய்துள்ளது.

"தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தென்னிட்டின் பொருளாதாரத்துக்கு மிகவும் முக்கியமானதாலல அதை வெகு விரைவில் முடிக்க வேண்டும்" என்று போக்குவரத்து அமைச்சகம் வற்புறுத்தியுள்ளது.

எம். ஆர். இராதாமீது வழக்கு

சூலை 27-ம் நாள் விசாரணை

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள்மீது சுட்டதாகவும், தற்கொலை செய்துகொள்ள முயற்சித்ததாகவும் நடிகர் எம். ஆர். இராதா மீதுள்ள வழக்கு விசாரணை சூலை 27-ம் நாள் செஷன்ஸ் நீதிமன்றத்தில் ஆரம்பமாகும்.

'மக்களாட்சி உணர்வுக்கே மாறுனது'

'ஒப்பந்தங்கள் மறு ஆய்வு செய்யப்படுவதில்லையா?'

மன்னர்களுக்குச் சலுகை---செ. கந்தப்பன் கடும் கண்டனம்

புதுடில்லி, சூலை 13—

இந்தியாவில் முன்னுள் மன்னர்கள் அனுபவித்துவரும் உதவித் தொகையையும், தனிச் சலுகைகளையும் நீக்க வேண்டுமென்ற தீர்மானத்தின்மீது பேசிய கழக உறுப்பினர் செ. கந்தப்பன் எம்.ஏ., அனுபவித்துவரும் தனிச் சலுகைகளின் பட்டியலே படித்துக்காட்டி, அவை, 'மக்களாட்சி உணர்விற்கே விரோதமானவை' என்று கூறினர்.

"மீன்பிடிக்கும் உரிமையிலிருந்து துப்பாக்கிச் சூடும் உரிமை வரை, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சொத்து வரியிலிருந்தும் வருமான வரியிலிருந்தும் அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

'மன்னர்களுக்கு பொது வரிப்பணத்திலிருந்து அளிக்கப்படும் உதவித் தொகையும் சலுகைகளும், அரசும் மன்னர்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தால் ஏற்பட்டவை' என்று மொரார்ஜி தேசாய் கூறியதற்குப் பதில் அளிக்கும் வகையில், 'அனத்து நாட்டுச் சட்டப்படி ஒப்பந்தங்கள் மறு ஆய்வு செய்யப்படுவதில்லையா ?'' என்றும், 'இந்த ஒப்பந்தங்கள் அந்தரேர சங்தர்ப்பச் சூழ்நிலே காரணமாக உருவானவையே' என்றும் சுட்டிக்காட்டினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பண்டித நேருவே, மானியத் தொகையை தாங்களாகவே வாய் காமலிருக்க முன்வரவேண்டும் என்று பல மன்னர்களுக்கு எழுதினர்; ஆனால், அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லே.

"மேலும், பல மன்னர்கள் மக்கீன உறிஞ்சி தங்கள் சொத்துக்களைப் பெருக்கிக்கொண்டனர், எனவே, காட்டுக்காகத் தங்களிலிப்புகுதினர் தியாகம் செய்தனர் என்கிற வாதம் பொலியானதாகும்."

இந்த விவாதத்தைத் துவங்கி வைத்துப் பேசிய மது லிமாயி (ச. சோர.) குறிப்பிட்டதாவது :—

"முன்னுள் மன்னர்கள் உதவித் தொகை பெறுவதோடு மட்டுமன்றி, தங்கள் அரண்மனைகளுக்கு வரிவிலக்கு—மின்சாரக் கட்டண விலக்கு—தண்ணீர் வரிவிலக்கு—தங்கள் மோட்டார்களுக்குத் தனி எண்கள் வைத்துக்கொள்ளும் உரிமை போன்றவைகளை அனுபவித்து வருகின்றனர்; அவைகளை ஒழிக்கவேண்டும்.

"இராம்பூர் மன்னர் தமக்குச் சொந்தமான மாளிகையில் விறுதியையும், இதர அலுவலகங்களையும் வைத்திருக்கிறார். அவைகளுக்கும் இப்போது மின்சாரக் கட்டண விலக்கு அளிக்கப்படுகிறது.

"அவர்கள் நீதிமன்றங்களுக்கு வருவதற்கும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது; இவை மக்களாட்சி சமூகத்திற்கு விரோதமானவை."

நாடாளு மன்றத்தில் 'விசித்திர' விளக்கம்!

புதுடில்லி, சூலை 13—

இன்று நாடாளுமன்றத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களின் உரிமைபற்றிய ஒரு விசித்திர விளக்கம் கிடைத்தது.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், 'மலத்தைத் தூக்கிச் செல்வது நகரசுத்தித் தொழிலாளரின் பரம்பரை உரிமை மட்டுமன்றி, வழிவழியாகப் பெரும்பாலான நகர சுத்தித் தொழிலாளர்கள் அடைந்துவரும் ஒருவித சொத்தாகவும் கருதப்படுகிறது' என்று சமூகநலத் துணையமைச்சர் கூறினர்.

இதுபற்றி சமூகநல அமைச்சர் அசோக் மேத்தா விளக்கமளிக்கையில், மலத்தை எடுத்துச் செல்லத் தங்களுக்கு மட்டுமே உரிமை உண்டு என்று நகரசுத்தித் தொழிலாளர்கள் கூறுவதாகவும், தம்மில் தூக்கிச் செல்வது அல்லது வேறு வித மாக எடுத்துச் செல்வது அவர்கள் விருப்பம் என்றும், தருந்த இழப்புத் தொகை கொடுக்க முடியுமென்கு, இந்த உரிமையை நீக்க முடியும் எனறும் குறிப்பிட்டார்.

—மாணவியர் விடுதிகளுக்கும், தாழ்த்தப்பட்டோர் நலத் துறையால் நடத்தப்பட்டு வருகின்ற மாணவ—மாணவியர் விடுதிகட்கும், அறநிறுவனங்களால் நடத்தப்படும் அனுதை விடுதிகட்கும், மற்றும் மருத்துவமனைகட்கும், கிலோ 66 காசுக்கு மேற்படாத பச்சரிசியோ புழுங்கலரிசியோ பங்கீட்டு அடிப்படையில் வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

முரசொலி

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.எல்.

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 30 (14—7—67) வெள்ளி

அரசியல் காழ்ப்பைக் காட்டும் அளவுகோல்!

மழை நின்றும் தூவானம் நிற்கவில்லை. குடிசைகளுக்குக் கொள்ளி வைப்பதால் ஏற்படக்கூடிய பெரும் நாசம் குறைந்திருக் கிறது என்றலும், கொள்ளி வைக்கின்ற கொடுமை அறவே நின்றபாடில்லை.

கொள்ளி வைப்பது தொடர்ந்துகொண்டுதான் வருகிறது. குடிசைவாழ் மக்களின் விழிப்புணர்ச்சியும், காவல்துறையின் முன் னெச்சரிக்கையானபாதுகாப்பும் கொள்ளிவைப்பால் ஏற்படக்கூடிய நாசத்தின் அளவைக் குறைத்திருக்கின்றன. இதுவுமன்றி, குடிசை களில் குடியிருக்கின்ற மக்களிடம் மூண்டுள்ள பீதியையும் பரபரப் பையும் தவிர்த்திருப்பதுடன், கொள்ளிவைப்பு அபாயம் ஏற்பட முடியாது என்ற நம்பிக்கையையும் அவர்களிடம் உருவாக்கியிருக் கின்றன.

குடிசைகளில் குடியிருக்கின்ற மக்களின் அலட்சியத்தாலும் கவலையின்மையாலும், குடிசைகள் சிலவோ, பலவோ தீக்கிரை யாவது இயற்கை. இதற்கு முன்னர் நடைபெற்றிருக்கின்ற தீ விபத்துக்கள், மேலே குறித்துள்ள முறையைப் பற்றினதாகத் தான் இருந்திருக்கிறது. ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கின்ற— ஏற்பட்டுவருகின்ற தீச் சம்பவங்களோ, மர்மம் நிரம்பியனவாக இருக்கின்றன. நகரத்தின் எட்டுத் திசைகளிலும், தீ மூட்டும் கொடுமை, விட்டு விட்டு நிகழ்ந்தவண்ணம் உள்ளது.

தாம்பரத்தைச் சேர்ந்த இருப்புலியூரில் இரண்டு குடிசைகள் எரிந்திருக்கின்றன. குடிசைகள் இரண்டும் எரிந்து சாம்பலாவ தற்கு முன், தீ அணைக்கப்பட்டுவிட்டன. அரை குறையாக எரிந்துவிட்ட அவ்விரண்டு குடிசைகளிலிருந்தும், பாதி எரிந்து போன கந்தல் துணிகளும், கறுப்பு நிறப் பொருளுள்ள பைகளும் கண்டெடுக்கப்பட்டனவாம். அப்பண்டங்கள் இரசாயனப் பரீட் சைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இத்தொடர்பில், மற்றெரு தகவலும் தரப்பட்டுள்ளது. அதா வது 'உடல் பெருத்த குட்டையான கறுப்பு நிறத்தவன்' ஒருவன், மேலே குறிப்பிட்டிருக்கின்ற குடிசைகள் எரிந்துகொண்டிருக்கின்ற பொழுது, அக்கிராமத்தில் மறைந்திருந்தானும்.

இதைக்கொண்டும், ஏற்கனவே கிடைத்திருக்கக்கூடிய வெவ் வேறு தகவல்களைக்கொண்டும், இதுவரை நடைபெற்றுள்ள கொள்ளி வைப்புக்களே நோக்குமிடத்து, இத்தீவைப்புக்கள் அனைத் துக்கும் பின்புலமாக ஏதோ ஒரு தீய சக்தி மறைமுகமாக இயங்கி வருகிறது என்பது விளக்கமாகிறது. இதன் உண்மையைக் கண் டறிய அரசு மேற்கொண்டிருக்கின்ற முயற்சியை அவரும் அறிவர். இதற்காகத் தமமால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரி யின் அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதற்கெனப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய அரசாங்க அதிகாரியின் அறிக்கையை அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண் டிருக்கின்றனர்.

இன்று வரை நடந்திருக்கின்ற இக்கொலைபிலும் கொடிய கொள்ளி வைப்பு நிகழ்ச்சி திட்டமிட்ட சதியா அல்லது சதியாகத் தான் இருந்திடவேண்டும் என மக்களிடம் பரவலாக உள்ள கருத்து தவறுதா என்பது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் எப் படியோ இருக்கட்டும். அதிகாரின் அறிக்கை இதை முடிவு கட்டட்டும். அதுவரையில், பொறுமையாகத்தான் அனைவரும் இருந்தாக வேண்டும்.

அவசரம் அவசரமாகச் செய்யவேண்டிய பணிகளும் உண்டு. முழு அளவில் ஆராய்ந்து நிதானமாகச் செய்யவேண் டிய பணிகளும் உண்டு.

வெந்துகொண்டிருக்கின்ற குடிசையின் தீயை அணைப்பதும், அக்குடிசைக்குள்ளிருக்கின்ற பொருட்களே அகற்றுவதும், ஒரு விஞ்சியும் தாமதிக்காமல் செய்யக்கூடிய பணிகளாகும். இப்பணி களில் தாமதம் காட்டுவது கூடாது.

ஆனால், இத்தீ ஏற்படுவது எப்படி, இத்தீயை யாராவது திட்ட மிட்டு மூட்டியிருக்க முடியுமா எனக் கண்டறிந்து கூறுவது பொறுமையாகச் செய்யவேண்டிய பணி. இப்பணியில் அவசரம் காட்டுவது அறவே கூடாது.

உண்மையான குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்ப தில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப் பட வேண்டும் என்றும், எவரும் விரும்புவர்.

இதுபோன்றே, குறிப்பிட்ட குற்றத்தைச் செய்யாத நிரபராதி கள் தண்டனைக்குள்ளாக்கப்படக் கூடாது என்பதும் முக்கியமான தாகும். குற்றம் செய்தவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்படவேண்டும் என விழைவது எவ்வளவு முக்கியமோ, அதில் கொஞ்சமும் குறை யாததுதான் நிரபராதிகள் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்படக்கூடாது என விழைவதும் ஆகும்.

நடைபெற்றிருக்கின்ற தீ விபத்துக்கள் பற்றிய உண்மைக் காரணத்தை ஆராய்ந்து அறிக்கையிட அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டிருக்கின்ற நனி அதிகாரியின் முடிவு இதற்குள் வெளிவராத தைக் காரணமாகக் காட்டி, பொருத்தமில்லாமல் அரசாங்கத்தைக் கண்டிக்கத் துணிந்திருக்கின்ருர், இப்பொழுது காங்கிரசுக் கட்சிக் காரராக இருக்கின்ற மாநகராட்சிமன்ற உறுப்பினர் ஒருவர். கழக ஆட்சியைக் கண்டிப்பது என்பது அவருக்கு இனிப்பானது. காரண மில்லாமலே, கழகத்தைக் கண்டிக்கும் இயல்புகொண்டவர் அவர். வெறும் வாயையே மெல்லுகின்ற பழக்கத்துக்குத் தம்மை அடிமை யாக்கிக்கொண்டிருக்கின்ற அந்தக் கனவான், தனி அதிகாரியின் முடிவுதெரிவதில் ஏற்படக்கூடிய நாமதத்தைத் தம் வாயிலிட்டு மெல் லுந்தக்க இரையாகக்கொண்டுவிட்டதில் வியப்பில்லை. இதைக் காட்டி, தமிழக அரசைச்சாட, அவர் முன்வந்திருப்பது விரும்பத் தக்கதல்ல — வருந்தத்தக்கதாகும். இந்த நல்லவரின் தாக்குதல் அரசியல் காழ்ப்பைக் காட்டும் அளவுகோலாகும். —கா.க.

அதிகார -- ஆனவ அரசு அல்ல!

உழைத்துப் பிழைக்கும் உழைப்பாளர்களின் அரசு!

"தி. மு. கழகம் கோட்டையிலே கொலுவிருக் கும் அளவுக்கு அமர்ந்துள்ளதென்ரல், வஞ்சகம் அறியாத -- நேர்மையே உருக்கொண்ட கிராமப் புறத்து மக்களால்தான் இந்தப் பெரு வெற்றி கிடைத்துள்ளது.

"கோட்டையிலே அமர்ந்திருக்கும் அமைச்சர் களாயினும் சரி—சட்டமன்ற உறுப்பினர்களா யினும் சரி—அவர்களெல்லாம் ஏழை எளியவர் களுக்காக - அவர்தம் வாழ்வில் இன்பம் பூத்துக் குலுங்குவதற்காக - அவர்தம் முகத்தில் வினோத தோல்விகளே அனுபவித்தவர்கள்! இப்படிப் பட்டவர்கள்தான் இன்று ஆட்சிக்கு வந்திருக் கிறார்கள்—உங்கள் வாழ்விலே மறுமலர்ச்சியை உண்டாக்க!

"இங்கு சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கும் அமைச்சர்கள் துன்ப துயரங்களே அறிந்தவர் கள்! பசியோடு போராடி, 'பசிக் கொடுமை என்றல் என்ன' என்பதைப் புரிந்துகொண்டிருப் பவர்கள்! வில்வாசி ஏற்றத்தால் வினாந்த தோல்விகளே அனுபவித்தவர்கள்! இப்படிப் பட்டவர்கள்தான் இன்று ஆட்சிக்கு வந்திருக் கிறார்கள்—உங்கள் வாழ்விலே மறுமலர்ச்சியை உண்டாக்க!

"இன்று சட்டமன்றத்தில் அமர்ந்திருக்கும் அமைச்சர்கள் துன்ப துயரங்களே அறிந்தவர் கள்! பசியோடு போராடி, 'பசிக் கொடுமை என்றல் என்ன' என்பதைப் புரிந்துகொண்டிருப் பவர்கள்! வில்வாசி ஏற்றத்தால் வினாந்த தோல்விகளே அனுபவித்தவர்கள்! இப்படிப் பட்டவர்கள்தான் இன்று ஆட்சிக்கு வந்திருக் கிறார்கள்—உங்கள் வாழ்விலே மறுமலர்ச்சியை உண்டாக்க!

"இந்தியாவிலேயே — தமிழக அரசியல் புதுமையாக - வித்தையாக இருக்கிறது என்று வெளிநாட்டினரெல்லாம் வியக்கின்றனர்!

அமெரிக்கப் பத்திரிகை நிருபர் ஒருவர் என்னிடம் கேட்டார்—'நீங்கள் எப்படி வெற்றிபெற்ற தீர்கள்' என்று; 'கிராமம்புறங்களில் சென்று பாருங்கள்—தெரியும்' என்றேன்; அதற்கு அவர், 'அங்கு போக முடியவில்லே. என் கார் போகும் அளவுக்கு அங்கு சாலே வசதிகள் இல்லே; அப்படியே சென்றலும் மேடும் பள்ள மும், கல்லும் முள்ளுமாக இருக்கிறது' என்றர்; அதனல்தான் நாங்கள் வென்றோம்' என்றேன்; பிறகு அவர் புரிந்துகொண்டார்!

அமெரிக்க நாட்டிலிருப்பவர்கள்—சோவியத் நாட்டில் இருப்பவர்கள்—இங்கிலாந்தில் இருப்ப வர்கள்—கடலுக்கடந்து வரும் வெளிநாட்டினரெல் லாம் புரிந்துகொள்ளுகின்றனர்—ஆனல் பக்த வத்சலத்திற்குத்தான் இன்னும் புரியவில்லே!

எங்களால் ஏழைகள் ஏற்றம் பெற்றிருக்கின் றனர்! எளியவர்கள் முகத்தில் மலர்ச்சி நிழல் படர்ந்திருக்கின்றது! அன்புடய காய்ச்சிகளும், அயராது பாடுபடுபவர்களும், 'நல்லவர்வு பெறு வோம்' என்று நம்பியிருக்கின்றனர்!

"கிராமப்புறங்களில்தான் ஏழைகள் பெரும் பாலும் ஏழைகளாகவே இருக்கிருர்கள்! நம் நாட்டில் நூற்றுக்குப் பதினைந்து பேர்கள்தான் பிற தொழில்கள் பார்க்கின்றனர்—ஐந்து பேர் வேலேதேடி அலேகின்றனர்; ஆனல் நூற்றுக்கு எண்பது பேர் விவசாயம் செய்கின்றனர்!

"இவர்கள் காலேமுதல் நடுப்பகல் வரை கூத விலும், கொடு வெயிலேயும் கழனிவெளிகளிலே உழன்று—உடலிலிருந்து வேர்வை ஆருகப் பெருகியோட இயற்கைபோல் உழைத்து— மாலேயில் வீடு திரும்பும்பொழுது சாறு பிழிந்த சக்கைகளாகவே வருகின்றனர்!

"அவர்கள் வாழ்வில் நிம்மதி இருக்கவேண் டாமா? அவர்கள் கும்பம் மகிழ்சியாக இருக்க வேண்டாமா?

"கையிலே மட்டும் நெய்யை வைத்துக் கொண்டு சோற்றிலே ஊற்றிவிட்டால், சோறு மணக்குமா?

"இதுவரை காங்கிரசுக்காரர்கள் பன்னீரை அங்குமிங்கும் தெளித்துவிட்டு, 'எங்கும் மணக் கிறது; இந்த மணம், இந்திரலோகத்தில்கூட இருக்காது, இருக்காது' எனருர்கள்!

"ஆனல் நாம், உடலிலுள்ள அழுக்கை நீக் கித் தூய்மை பெறச் செய்து, உழைக்கவும் பிழைக்கவும் வழிவகை செய்யவேண்டும்!

"வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுத்தால் மட்டும் காரியம் நடைபெருது! ஏற்றிவிட்ட விளக்குக்கூடத் தூண்டிவிடுகொண்டே இருக் தால்தான அது அணையாமல் இருக்கும்!

"நீங்களும் எங்களேப் பதவியில் அமர்த்திய தோடு விட்டுவிடாது, எங்களுக்கு உறுதுணேயா யிருக்கவேண்டும்.

'ஆட்சி' என்ற தீபம் மேலும் பிரகாசிக்க வேண்டுமானல், உங்களுடைய 'ஒத்துழைப்பு' எனும் தூண்டுதல் இருக்கவேண்டும்.

"இந்த அரசு, வெறும் அதிகார அரசு அல்ல! ஆனவ அரசு அல்ல! உழவர்கள் அரசு— உழைத்துப் பிழைக்கும் உழைப்பாளர் கூட்டங் களின் அரசு—உங்கள் அரசு! இந்த அரசுக்கு உங்கள் ஒத்துழைப்புத் தேவை.

"கிராமப் பகுதிகளுள்ள திராவிட முன்னேற் றக் கழகத் தோழர்கள், நாம் செய்த சாதனைகளே, புரியாத மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். பெரியவர்கள் எங்களுக்கு யோசனே கூறவேண் டும்."

நமது அடக்க உணர்வில் காங்கிரசாருக்கு கிலிபிறந்துவிட்டது

"ரூ. 1000 என்றிருந்த அமைச்சர்களின் சம்ப ளத்தில், ரூ. 500-தான் வாங்க வேண்டுமென்று உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறோம். உறுதி எடுத்துக்கொண்டோமே தவிர, இன்னும் சம்பளம் வாங்கவில்லே!

"நாங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டதற்குக் காரணம், நீங்கள் எப்படி எளி மையாக இருக்கிறீர்களோ, அப்படியே நாங் களும் இருக்க விரும்புகிறோம்!

"உங்களில் ஒருவராக—உங்கள் குடும்பத் தில் ஒருவராக—உங்கள் மத்தியிலே உலவ விரும்புகிறோம்!

"இதனுல் காங்கிரசு கண்பர்களுக்குக் கிலி பிடித்துவிட்டது! அவர்கள் என்ன கினைத்தார் களோருல, 'புதிதாக வந்தவர்கள், 'டுத்தேன்—கவிழ்த்தேன்' என்ற நிலேயிலான் இருப்பார் கள்; அதிகாரம் புதிதாகையால் ஆர்ப்பாட்டம் செய்வார்கள்; பசியோடிருப்பவன் அறுசுவை உணவை அள்ளி உண்பதுபோல், பதவி கிடைத்ததால் வீண் ஆடம்பரங்கள் செய்வார் கள்' என்று நினேத்தார்கள்—தங்களேப்போல!

"ஆனல் நமது அடக்க உணர்வையும், ஆட்சி நெறியையும், அதிகார முறையையும் பார்த்து அவர்களுக்குக் கிலி பிடித்துவிட்டது— 'எங்கே இருபது ஆண்டுகள் இவர்களும் இரு பார்களோ' என்று!

சமுதாயத்தில் தீயசக்திகளை உருவாக்குபவர்கள் உள்ளனர்!

"பட்டணத்தில் பிழைப்பதற்காக வந்து, வெயிலும் மழையையும் கொஞ்சம் தாங்கக் கூடிய அளவுக்கு ஓலேக் குடிசைகள் போட்டு வாழ்பவர்களேப் பார்த்து மனம் பொருமல், அந்த ஓலேக் குடிசைகளுக்கு நெருப்பு வைத்தார்களென் ருல், அவர்களில்ல அயோக்கியர்கள் வேறு யாரும் இருக்கமுடியாது!

"நல்ல உடம்பில் சிரங்கு இருப்பதுபோல— மாம்பழத்திலே வண்டு தூளியுருவதுபோல— பாலிலே உப்புக் கல் விழுந்ததுபோல—சமுதா யத்திலே தீயசக்திகளே உருவாக்குபவர்கள் இருக் கிறார்கள்! அவர்களே விட்டுவைத்தால் காட் டுக்கே ஆபத்து!

"இதை நான் சொல்லக் காரணம், சென்ற வாரம் மழையைப் பார்த்து, 'உனவு நெருக்கடி இனி இருக்காது' என்று மகிழ்ச்சியோடிருந்தேன்; ஆனல், என்னத் திடுக்கிட வைத்தது—சென் னேக் குடிசையில் பற்றி எரிந்த தீ!

"மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் சென்னேயி லுள்ள குடிசைகளெல்லாம் அப்புறப்படுத்தப் பட்டு—தீ மூட்டினலும் மூளாத அளவுக்குக் கல் நார்த் தகடு வீடுகள் கட்ட ஏற்பாடு கடை பெற்று வருகிறது."

—அறிஞர் அண்ணு
(சின்னம்பேடு கூட்டத்தில்)

அரிசி கள்ளக்கடத்தல்

மைசூர் அமைச்சர் தகவல்

பெங்களூர், ஜூலை 10—மைசூர் மாநிலத்திலிருந்து அரி சியை களள்ளக்கடத்தல் செய்து கேரள மாநிலத்தில் விற்கின்றனர். இப்படிக் கடத்தில் செல்லப்பட்ட லாரிகள் பிடிக்கப்பட்டிருக் கின்றன.

ஒரு லாரி நிறைய அரிசி மூட்டைகளே கேரளத்திற்குக் கடத் திச் சென்று விற்றால் சுமார் ரூ. 7,000 கிடைப்பதாக மைசூர் உனவு அமைச்சர் பி. டி. ஜட்டி, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

புதிதாக 67 உயர்நிலைப் பள்ளிகள்

தமிழக அரசு அனுமதி

சென்னை, ஜூலை 12—

தமிழக அரசு, புதிதாக 67 உயர் நிலேப் பள்ளிகள் திறக்க அனுமதி அளித்திருக்கிறது. இவற்றில் பெண்களுக்கு மட் டும் ஏழு பள்ளிகளாகும்.

புதிய பள்ளிகளில் 45-ஐ அரசே மேற்கொண்டு நடத்தும்; மீதி 22-ஐ 12, அரசு உதவிபெறும் பள்ளிகளாக இருக்கும். 10 பள்ளிகளே நகராட்சிமன்றங் கள் நடத்தும்.

நகராட்சிகள் நடத்தும் 10 பள்ளி களில் 7 பள்ளிகள் சென்னே நகரில் அமையும்.

தஞ்சை மாவட்டத்தில் புதிதாக 11 உயர்நிலேப் பள்ளிகள் ஏற் படும்.

சென்னே நகரில் 9 புதிய உயர் நிலேப் பள்ளிகள் ஏற்படும்; மாநகராட்சி ஏற்படுத்தும் 7 போக மீதி இரண்டும் மயி லாப்பூரிலும், வடபழனியிலும் ஏற்படும்.

தமிழகத்தில் இப்போது 2,377 உயர்நிலேப் பள்ளிகள் உள் ளன; புதியவையும் சேர்த் தால் 2,444 உயர்நிலேப் பள்ளி களாகும்.

சர்க்கரை விநியோகத்தில் சீர்கேடுகள் அகற்றப்படும்

மொத்த வியாபாரிகளை நீக்கிவிட்டு அரசே நேரடியாக ஈடுபட யோசனை

சட்டமன்றத்தில் உணவு அமைச்சர் தகவல்

சென்னை, சூலை 12—

"சர்க்கரை விநியோக முறையில் நிலவும் சீர்கேடான நிலைமைகளை நீக்க, மொத்த வியாபாரிகளை அகற்றிவிட்டு அரசே நேரடியாக ஈடுபடுவதுகுறித்தத் தீவிர ஆலோசனை செய்து வருகிறது"

என்று சட்டமன்றத்தில் உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அறிவித்தார்.

மத்திய அரசு, தமிழகத்திற்கு ஏற்கனவே ஒதுக்கிவந்த சர்க்கரை அளவைக் குறைத்துவிட்டதன் விளைவாகவே சர்க்கரைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், முன்பு 16,000 டன் ஒதுக்கப்பட்டது. பிறகு 11000 டன்களாகவும், இப்போது 9,000 டன்களாகவும் குறைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

திருமண காலங்களில் அதிக சர்க்கரை தேவைப்படுமாகையால் திருமண மாதங்களுக்காகி ஓம் அதிக அளவு சர்க்கரை ஒதுக்குமாறு தமிழக அரசு கோரியதற்கு மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது என்றும், 'பிரித்தி மாதங்களுக்குரிய சர்க்கரை அளவைக் குறைத்துக் கொள்வதாகிறதால் திருமண மாதங்களில் அதிக சர்க்கரை ஒதுக்கத் தயார்' என்று மத்திய அரசு கிபக்தின விதித்திருக்கிறது என்றும் அமைச்சர் கூறினார்.

வெல்லச் சர்க்கரை (பழுப்புச் சர்க்கரை) தமிழகத்திலிருந்து வெளியேறுவதற்குக் கட்டுப்பாடு விதிப்பது குறித்தும் ஆலோசித்து வருவதாக அமைச்சர் கூறினார்.

மதுரை சிறப்பு அங்காடியில் இழப்பு

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, சூலை 12—

சட்டமன்றத்தில் திரு. சீமைச்சாமி கேட்ட கேள்விக்கு கூட்டுறவு அமைச்சர் திரு. மாதவன் அளித்த பதில் வருமாறு :—

"மதுரைக் கூட்டுறவு சிறப்பு அங்காடி (Super Market) கீழ்க் கண்ட காரணங்களே முன்னிட்டு இழப்பில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது :—

அரசினரின் பங்கு மூலதன மாகிய ரூ. 3 இலட்சத்துக்கும்—உறுப்பினர்களின் பங்கு மூலதன மாகிய ரூ. 27,270 தொகைக்கும் கூடுதலாக, மதுரை சிறப்பு அங்காடி கூட்டுறவு மத்திய வங்கியில் மிருந்து ரூ. 12 இலட்சம் ரொக்கக கடன் பெற்றுள்ளது. அது, இக் கடன்மீது ஆண்டுதோறும் 9 சத வீதவட்டி செலுத்துகின்றது; அக் கடன்கள் கொண்டு வாங்கிய சரக்குகள் விரைவாக விற்பனையாகாமல் உள்ளன.

1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரையில் சிறப்பு அங்காடிக்கு ரூ. 1,46,000 தொழில் ஆதாயம் விலகத்தது; ஆனால், வட்டிச் செலவுகள்—வாடகைகள்—பணியாளர்களுக்கான செலவுகளை—சில்லறைச் செலவுகள் ஆகியவற்றின் காரணமாக ரூ. 1,86,000 செலவாகியது. இதலுல், மேசை, நாற்காலி போன்றவற்றின் தேய்மானமும், ஏனைய சிறுசுகளின் செலவுகளும் நீங்கலாக, சிறப்பு அங்காடிக்கு ரூ. 40,000 கிலர இழப்பு ஏற்பட்டுள்ளது.

1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் ஆறு மாதக்கால அளவில் ரூ. 18,60,000 மொத்த வியாபாரத் தொகையையே சிறப்பு அங்காடியில் காட்ட முடிந்தது. துணிகள், ஒப்பாரப் பொருள்கள், வீட்டுப் பொருள்கள் போன்றவற்றின் இருப்பில் பெரும் பகுதி விரைவில் விற்கப்படாமல் உள்ளதே இதற்குக் காரணம். இது சம்பந்த மாகக் கூட்டுறவு பதிவாளர் கவனித்துக்கொண்டிருக்கிறார்."

மேலும் துணைக் கேள்விகட்கு அமைச்சர் பதிலளிக்கையில், ரூ. 17 இலட்சதுக்குப் பம்பாய் சென்று விற்பனையாகாத சரக்கு கீனை வாங்கிவந்ததே இழப்புக்குக் காரணம் என்றும், இது சம்பந்த மாகத் தொடர்புடைய அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்றும், சென்னை சிறப்பு அங்காடியில் ஓரளவு இலாபம் கிடைக்கிறது என்றும் எதிர் பார்க்கப்பட்ட இலாபம் கிடைக்க வில்லை என்றும் கூறினார்.

சூயஸ் கால்வாயை நம்பி நிற்பது அவசியமா?

இலண்டன், சூலை 13—

சூயஸ் கால்வாய் குறைந்தது 6 மாத காலம் மூடப்பட்டிருக்கும் என்ற யூகத்தின் அடிப்படையில் உலகின் கப்பல கம்பெனிகள் தங் களைய கப்பல்களே வேறு பாதையில் அனுப்புவும் ஏற்பாடு கனச் செய்துவருகின்றன.

சிதம்பரம் அருகில் காகிதத் தொழிற்சாலை ஏற்படுமா?

சென்னை, சூலை 12—

"தமிழ் நாட்டில் ஏற்கனவே இரண்டு காகிதத் தொழிற்சாலே இருந்து வருகிறது; மேலும் இரண்டு நிறுவுவதற்கான திட்டம் இருந்துவருகிறது. இந்த கிலையில் சிதம்பரம் தாலுகாவில் ஒரு காகித ஆலையை நிறுவும் உத்தேசம் இல்லை"

என்று, தொழில் அமைச்சர் திரு. நிரா. நெடுஞ்செழியன், திரு. சிவ சுப்பிரமணியம் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

மேலும் அவர் தெரிவித்த தாவது :—

"சிதம்பரம் பகுதியில் கிடைக்கும் மூங்கில்கள் வீடு கட்டுவது போன்ற காரியங்களுக்குத்தான் போதுமானதாக இருக்கும்; ஒரு காகிதத் தொழிற்சாலைக்குத் தேவையான அளவுக்கு அங்கு மூங்கில்கள் கிடைக்க வசதி இல்லே. இப் போது அங்கு கிடைக்கும் மூங்கில்களே மட்டும் நம்பி ஒரு தொழிற்சாலேயை ஏற படுத்த இயலாது."

துணை அமைச்சர்கள் நியமிக்கும் யோசனைக்குக் காரணம் என்ன?

முதலமைச்சர் அண்ணு விளக்கம்

சென்னை, சூலை 12—

தமிழக அரசில் துணை அமைச் சர்கள் நியமிப்பது பற்றி, சட்ட மன்றத்தில் மு த ல மை ச் ச ர் அண்ணு அவர்கள் குறிப்பிட்ட தாவது :—

"காலேயில் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வருவதற்குள் என்னிடம் தரப்படும் மனுக்கள் குவியலைப் பார்த்தால், அவை கீனப் படித்துப் பார்த்து, எந்த இலாகாவுக்கு அனுப்ப வேண்டும் என்று கண்டறிவதற் குக்கூட நேரம் இல்லே.

"என்னிடம் வருகின்றவர்கள் நி யா யமான பிரச்சினைக்கு—தேவையான தீர்வைச் சரக்கு வருகிறார்கள்; இவைகளேப் படித்து, 'செய்யக் கூடியவை தானு?' என்று கண்டறிந்து அந்தந்த இலாகாவுக்கு அனுப்பி—அனுப் பிய பிறகு, 'செய்து முடித்துவிட் டார்களா' என்று கேட்பதற்கு இடைவெளி இல்லே; அதனுல தான், 'அமைச்சர்களுக்கு எல் லாம் துணே அமைச்சர்களே நி யமிக்க வேண்டும்' என் று யோசனே சொல்லி வந்தேன்.

துணே அமைச்சர்கள், இந்த மனுக்களே அந்தந்த இலாகாக் களுக்கு அனுப்பி சீர்படுத்த உதவியாக இருப்பார்கள்.

துணே அமைச்சர்களே நியமிக்கும் போது, 'அமைச்சர்களின் எண் ணிக்கையை ஏன் அதிகப்படுத் திக்கொண்டீர்கள்?' என் று கேட்டு, அதை ஒரு பிரச்சினே யாக்கிவிடக்கூடாது."

கே. விகாயகம் :—" துணே அமைச் சர்களாக நியமனம் பெறும் பாக் கியசாலி இவர்களின் பெயர் களே முதலமைச்சர் தெரிவிப் பாரா ?"

முதலமைச்சர் அண்ணு :—

"உரிய காலத்தில் நியமனம் அறிவிக்கப்படும். அப்போது அவர்கள் உங்களிடம் வந்து ஆசி பெறுவார்கள்."

இளம் வயதினர் ஈடுபடும் குற்றங்கள்

கல்லிங், சூலை 13—

உத்திரப்பிரதேச மாலதத்தில், கடந்த இரு ஆண்டுகளில் இளம் வயதினர் செய்த குற்றங்களில் திருட்டும், வீடு புகுந்து திருடுவதும் தான் மிக அதிகமாக உள்ளன.

அக்குற்றங்களின் எண்ணிக்கை 1558 ஆகும்; மாலேப் போலீசு நடத்திய ஓர் ஆராய்வில் இது தெரியவந்துள்ளது.

அவர்கள் செய்த குற்றங்களில் அடுத்த இடம் வகிக்கும் குற்றங் கள், குதிரட்சலால் சட்டங்களே மீறியவைகளாகும்; அவற்றின் எண்ணிக்கை 1,001 ஆகும்.

'நிர்பந்தங்களினுல் சூழ்நிலே பாழாகிறது'

'தேவையற்ற பிரச்சினேயைத் தென்னகத்தில் தோற்றுவித்திருக்கிறது'

இந்தி ஆதரவாளர் போக்குக்குக் கடும் கண்டனம்

புதுடில்லி, சூலை 12—

"இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும்வரை, தூண ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்கு மென்று முந்தைய தலேமை அமைச்சர்களான நேருவும், லால்பகதூரும் அளித்த உறுதி மொழிகள், தற்போது தயாரிக் கப்பட்டுவரும் ஆட்சிமொழித் திருத்த மசோதாவில் இணைக் கப்படும்"

என்று பாராளுமன்றக் காங்கிரசுக் கட்சி கிர்வாகக் குழுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் தெரிவித் தனர்.

"இந்தி பேசாத பகுதி மக்கள், தங்கள் கலன்கள் பாதிக்கப்படு கின்றன என்று கருத இட மளிக்கலாகாது; எல்லா மொழி யினருக்கும், திருப்தி தரக்கூடிய பொதுத் திட்டமொன்றை உரு வாக்க வேண்டும்"

என்று, தலேமையமைச்சர் இந்திரா காந்தி வலியுறுத்தினர்.

"இந்த மசோதா, இந்தி பேசாத பகுதி மக்களுக்கு திருப்தியை அளிக்கும். நாடாளுமன்றத்தில் தற்போதை கூட்டத் தொடரி லேயே இம்மசோதா கொண்டு வரப்படலாம்"

என்று, உள்துறை துணேமைச் சர் சுவ்லா குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்தி பேசாத பகுதிகளின் மக்க ளுக்கு நேருவும், சாஸ்திரியும் கொடுத்த உறுதி மொழிகள் மசோதாவில் சேர்க்கப்படும்; இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் காலம்வரை ஆங்கிலம் நீடிக்கும்" என்றார்.

ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாற 10 முதல் 15 ஆண்டுவரை கால வரம்பு நிர்ணயிக்கக் கூட்டத் தில் சிலர் வற்புறுத்தினர்.

இக்கூட்டத்தில் தனி அழைப் பின்பேரில் கலந்து கொண்ட திரு. பாரத்தசாரதி பேசுகையில், மக்களுமீது எக்கத் திட்டத்தையும் பலவந்தமாகத் தினிக்க முயற்சிப் பதில் பயனில்லே என்றும், உள் துறை அமைச்சகத்தின் கல மசோதாவை ஆதரிப்பதாகவும், இந்திக்கு மாற்றுவதற்கு கால வரம்பு எதையும் குறிப்பிடலாகாது என்றும் கூறினர்.

"ஆங்கிலத்தை அகற்றுவதற்கு மசோதாவில் தி ட் ட வட்டமான காலவரம்பு எதுவும் குறிப்பிடப்ப வில்லே" என்று இந்தி ஆதர வாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்த னர்.

கடசி செயலாளர்களின் ஒருவ ரான பி. வெங்கடசுப்பையா, 'இந்தி வெறியர்கள்' என்று குறிப் பிட்டதற்கு சில உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்; திருமதி சாரதா முகர்ஜி உட்பட வேறு சிலர் ஆதரித்தனர்.

ஆட்சி மொழி மசோதாவை எதிர்த்து தலேமையமைச்சரிடம் மனு ஒன்று கொடுக்க அண்மை யில் 100 எம்.பி.க்கள் முயற்சி செய்தபோது பி. வெங்கடசுப்பையா குறிப்பிட்டுப் பேசுகையில்,

"இப்போக்கு, தென்னாட்டுக்கு வேண் டா த பிரச்சினேயைத் தோற்றுவித்துள்ளது; மக்கள் அதை அன்பு அச்சமடைந்திருக் கின்றனர்; இத்தகைய நிர்ப் பந்தங்களினுல் சூழ்நிலே பாழாக் கப்படுகிறது; எனவே, மசோ தாவை காலதாமமும் செய்யா மல் கொண்டுவர வேண்டும்"

என்றார்.

நெசவுத் தொழிலில் நெருக்கடி

ஐதராபாத், சூலை 13—

ஆந்திர நெசவுத் தொழிலில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

பருத்தி கிடைக்காததால், இம் மாலிலத்தினுள்ள நெசவாலேகள் தமது திறனுக்கும் குறைவாகச் செயல்பட்டுவருகின்றனவாம்.

கடந்த மு ன் று மு ன் று மாதங்களில் 10.13 மீட்டராக கிடைத்துவந்த துணி 7.71 மீட்டராகி 25 சதவிகிதம் குறைந்து விட்டது.

இம்மாலிலத்தில் சுமார் 4 இலட் சம் கதிர்களும், 1,274 தறிகளும் உள்ளன; பதினயாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் இத் தொழிலில் வேலே பெறுகின்றனர். அவர்கள் ஆண்டிற்குச் சுமார் 50 இலட்சம் மீட்டர் வீதம் துணி நெய்கின்றனர்.

தீ விபத்து நிவாரணப் பணி— சென்னை 4-வது வட்டத்தில் உண்டியல் வருவி

தீவிலில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்குவதற்காக, 4-வது வட்டம் எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் 8—7—67 காலே 8-மணிக்கு வட் டச் செயலாளர் பி. கே. மூர்த்தி உண்டி ஏந்தி வீடு வீடாகவும், வீதி வீதியாகவும் மன்றத் தோழர்களு டன் சென்று ரூ. 105 வருவி செய் தார்.

"இத்தொகை அதிலர் அண்ணு அவர்களிடம் சேர்ப்பிக்கப்படும்" என்று வட்டச் செயலாளர் பி. கே. மூர்த்தி அறிவிக்கிறார்.

மின்சக்தி வழங்கும் நிலையங்கள் அமைத்தும் அரசு ஏற்கும்

சென்னை, சூலை 12—

"இம்மாநிலத்திலுள்ள தனியார் மின் வழங்கு நிலேயங்கள் அமைத் தும் அரசுமயமாக்கப்படும்; மொத்தம் இருந்த 22 தனியார் மின் வழங்கு நிறுவனங்களில் ஏற்கனவே அரசுமயமாக்கப்பட்ட மின் வழங்கு நிலேயங்களேயும் சேர்த்து 8 இருக்கின்றன; இவ்வாண்டு 3 நிலேயங்களே அரசு ஏற்க முடிவு செய்துள் ளது; மற்றவையும் படிப்படி யாக அரசால் ஏற்றுக்கொள் ளப்படும்"

என்று, சட்டமன்றத்தில், தொழில் அமைச்சர் நிரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

"முதலில் தனியார் மின் வழங்கு நிலேயங்களேச் சார்ந்திரால் எடுத்துக்கொள்ளப்படும்; நக ராட்சிக்குச் சொந்தமான மின் வழங்கு நிலேயங்களேப் பற்றிப் பின்னுலதான் முடிவு செய்யப் படும்; அவற்றை அரசு எடுத்து நடத்தினுலும், நகராட்சிகளே நடத்தினுலும் அவை பொதுத் துறை நிறுவனங்களேயைக வாய் அது குறித்தும் பிறகு யோசிக்கப்படும்"

என்றும் அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

இரயில் நிலேயங்களில் 80 காசு உணவு

தமிழக அரசு யோசனை— மத்திய அரசு பதில்

சென்னை, சூலை 11—

இரயில் நி லே ய ங் க ளி ல் 80 காசுக்கு உணவு வழங்கவேண்டு மென்று மத்திய அரசுக்குத் தமிழக அரசு எழுதிய கடிதத்திற்கு, இரு வகையான உணவுகொடுப்பதற்கு ஆய்வு செய்துகொண்டிருப்பதாக மத்திய அரசு பதிலளித்துள்ளதாக சட்டமன்றத்தில் உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறினர்.

ஈரோடு மாநாட்டில் திருக்குறள் நூல் காட்சி

சென்னை, சூலை 11—

இலங்கை நாடாளுமன்ற உறுப் பினரும் உலகத் தமிழ்மன்றத் தலே வருமான திரு. கா. பொ. இரத்தி னம், நேற்று தமிழகக் கல்வியமைச் சர் நிரா. நெடுஞ்செழியன் அவர் களுடன் சுற்றித்து, 'சேலம் நகரில் அடுத்த ஆண்டு நடைபெறுகிற கும் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் திருக்குறள் பற்றிய நூல்களேக்கொண்ட ஒரு சிறப்புக் காட்சியை ஒரு பகுதி யாக்கவேண்டும்' என வற்புறுத்தி னர்; அது பற்றிக் கவலிப்பதாகக் கல்வி அமைச்சர் கூறினர்.

ஈழம் அகதிகளை அனுப்ப இலங்கை ஒப்புதல்

சென்னை, சூலை 13—

இலங்கையிலிருந்து தமிழகத்திற் குத் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளே அனுப்பிவைக்க இலங்கை அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய அரசு தமிழக அரசுக்குத் தெரிவித் துள்ளது.

இதுவரை 1,000 அகதிகள் இலங் கைக்குத் திருப்பி அனுப்பப்பட் டுள்ளனர்.

அங்கு இயலவில்லே— இங்கு முயலுகின்றனர்!

லக்னே, சூலை 13—

இந்திய உதவியுடன் இமாசல அரசில் புதிதாகத் திறக்கப்படும் பல மருத்துவமனேகளில் பணி புரியக் கேரள நர்சுகளே நேபாள அரசு நாடுவதாகத் தெரிகிறது.

நேபாளத்தில் நர்சுகளுக்குக் கும் பஞ்சமிருப்பதால், அண்டை யிலுள்ள இந்திய மாலிலங்களான உத்தரப்பிரதேசம், பீகார், வங்காளம் முதலிய இடங்களிலிருந்து நர்சுகளேப் பெற முயன்று பலன் கிடைக்கவில்லே. —(நேபா)

வர்த்தகக் கழக மாநாடு

அமைச்சர்கள் பங்கேற்பு

தமிழ்நாடு வர்த்தகக் கழக 11-வது மாநாடு 16—7—67 மாலை 4-மணிக்கு குடந்தை மூர்த்தி கல்யாணங்கில் நடைபெறும்; ஈரோடு திரு. சேசவலால்; காளிதாஸ் சேட் தலைமைதாங்குவார்; பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி துவக்கி வைப்பார்; வணிக வரித் துறையமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் சிறப்புரையாற்றுவார்; சேலம் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. வணிகர் கொடியை ஏற்றிவைப்பார்.

வீடுகளுக்கு உச்சவரம்பு வரலாம்

முதலமைச்சர் சூசக அறிவிப்பு

சென்னை, சூலை 13—

"வீடுகளுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் பொருட்டுச் சட்டம் கொண்டுவரும் உத்தேசம் தற்போது இல்லை"

என்று, சட்டமன்றத்தில் திரு. வி. கே. ராதண்டராமன் கேள்விக்கு உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் விடையளித்தார்.

வி. கே. ராதண்டராமன் :—"நகர்ப் புறங்களில் ஏராளமாக வீடுகளைக் கட்டி வாடகைக்கு விடும் கொள்ளை லாபம் தரும் தொழிலை ஒரு சிலர் தங்கள் கையில் வைத்துக் கொண்டு நடத்திப்பதைக் கட்டுப்படுத்த இனி யாவது உச்சவரம்பு கொண்டு வர முயற்சி எடுக்கப்படுமா ?"

முதலமைச்சர் அண்ணா :—"உச்சவரம்பு கொண்டுவரும் உத்தேசம் தற்போது இல்லை என்பதிலேயே இனி எதிர்காலத்தில் இருக்கலாம் என்பதும் தொக்கி நிற்கிறது."

'ஒழுங்கீனங்கள் பற்றி விசாரணை நடத்த அரசு தயங்காது'

அரசு அச்சகத் துறை புகார்கள் பற்றி அமைச்சர் சத்தியவாணிமுத்து உறுதி

சட்டமன்றத்தில், எழுது பொருள்—அச்சுத் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தின்போது கூறப்பட்ட புகார்களுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து கூறிய தாவது :—

"அரசு அச்சகத் துறையில் ஒழுங்கீனங்கள் மலிந்துள்ளன என்ற புகார் இருக்கிறது. கான் திடீரென அங்கு சென்று பார்த்தபோது, ஒழுங்கீனங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை; ஒழுங்கீனங்கள் இருப்பதாகக் கூறப் பட்டவையும் மெய்ப்பிக்கப்படவில்லை.

"விருப்பத்திற்கு மாறுக சென்னை மத்திய அச்சகத்தி லிருந்து தொழிலாளர்கள் வட்டார அச்சகங்களுக்கு இனி மாற்றப்பட மாட்டார்கள்.

"பத்திரிகைகளில் வந்த செய்தியை ஆதாரமாகக் கொண்டு, 'அச்சகத் துறை டைரக்டர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று தொழிற்சங்கம் கேட்டுக் கொண்டது; ஆனால், பத்திரிகையில் வந்த செய்தியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியாது.

"அரசு அச்சகத்தில் அச்சு இயந்திரங்கள் கவனிப்பாரற்றும் பழுதாகியிருப்பதாகக் கூறப்படும் புகார்கள் சரியலல.

"புகார்கள்பற்றியும், ஒழுங்கீனங்கள்பற்றியும் விசாரணை நடத்த அரசு தயங்காது. இதற்காக ஒரு கமிட்டியும் அமைக்கத் தயார். இந்தக் கமிட்டியின் மூலம் விசாரணை நடத்தி, தவறு கண்டுபிடிக்கப் பட்டால் நட வடிக்கை எடுக்கப்படும்."

அடையாற்றுப் பாலத்துக்கு ஆபத்தா ?

'பத்திரிகைப் புரளி' பற்றி சட்டமன்றத்தில் விளக்கம்

சென்னை, சூலை 13—

இன்று சட்டமன்றத்தில் கேள்வி நேரத்திற்போது கழக உறுப்பினர் வி. ஏன். கோவிந்தராசன் பின்வரு மாறு கேட்டார் :—

"இன்று காலை வெளியான காங்கிரசுப் பத்திரிகை ஒன்றில், அடையாற்றில் புதிதாகக் கட்டப்பட்ட எல்லிஸ்பிரிட்ஜ் பாலம் 'கிடு கிடு' என்று ஆடுவதாகவும் காரில் சென்ருலு பூகம்பம்போல் நடுக்கம் ஏற்படுவதாகவும் செய்தி தரப்பட்டிருக்கிறதே— இது உண்மையா ?"

பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி :—"பூகம்பமும் இல்லை; 'கிடு கிடு' என்று ஆடவு மில்லை; அந்தப் பத்திரிகையில் அப்படிச் செய்தி வந்திருக்கிறது என்பதால் அதை விளக்க வேண்டியதில்லை."

டாக்டர் ஹண்டே கேட்ட மற்றெரு கேள்விக்கு அமைச்சர் அளித்த விடை வருமாறு :—

அங்கிருக்கும் பழைய பாலத்தைப் புதுப்பிக்க ரூ. 40 இலட்சம் செலவாகும் எனப் பொறியாளர்கள் மதிப்பிட்டுக் கூறினர்; அதற்குத் தற்போதைய நிதி நிலை இடம் கொடுக்கவில்லை.

"அந்தப் பாலம் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகவே பழுதுபட்டுச் சீர்கெட்டு மோசமான நிலையில் இருந்துவந்தது; 'எந்த நேரத்தில் இடிந்துவிடுமோ' என அஞ்சப் பட்டது; எனவே, உடனடியாகக் குறைந்த செலவில் பழுதுபார்த்து சிறிய பாலமாகக் கட்டினால் பின்னர் பெரிய பாலத்தை அதன் பக்கத்தில் அமைக்கலாம் என முடிவுசெய்யப்பட்டது.

வேலை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, இப்போது ஒரு பகுதி வேலை முடிந்துவிட்டது; அந்த வழியிலே வாகனங்கள் சென்று வருகின்றன. மற்றெரு பகுதி வேலை இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை மாத காலத்தில் முடிந்துவிடும்."

வி. எஸ். கோவிந்தராசன் :—"அந்தப் பத்திரிகையில் இப்படி எழுதியிருப்பதால், ஏ தேனும் சதித் திட்டம் இருக் லாம் என்பதால் அந்தப்பாலத்துக்கு முன் னெச்சரிக்கையாகப் போலீசுப் பாதுகாப்புச் செய்யப்படுமா ?"

அமைச்சர் பதிலுரைத்தார் :—"அந்தப் பத்திரிகைச் செய்தியைப் பற்றி இந்த அரசு அவ்வளவு கவலைப்படுவதில்லை."

வண்ணையில் தீவிபத்து

சென்னை, சூலை 13—

வண்ணைப் பகுதி 21-வது வட்டத்தில் (ஆரணி ரெங்கையன் தெரு), மாரி என்பவரின் வீடு இன்று காலை 8-30 மணிக்கு தீப்பற்றி எரிந்தது; உடன் கழகத் தோழர்கள் தீயை அணைத்தனர்.

மீண்டும் பிற்பகல் 2-30 மணிக்கு அதே வீடு எரிந்தது; உடனே என். எஸ். கே. நினைவு மன்ற கழகத் தோழர்களும் பொதுமக்களும் தீயை அணைத்தனர். வட்டச்செயலாளர் கே. எம். தீனதயாளன் ஆறுதல் கூறினர்.

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

16—7—67 காலை 4-10 மணி : சேலம் சுங்கிப்பு ; பொதுப்பணித்துறை ஆய்வாளர் மாளிகைக்குச் செல லல்

காலை 9 மணி : செவ்வாப்பேட்டை எடையிடும் நிலையம் துவக்கி வைத்தல

காலை 11 மணி : நாமக்கல்—கல் வித் துறையின் நடமாடும் மருத் துவ வண்டியை இயக்கிவைத்த லும், அலுவலகக் கட்டிட அடிக் கல் நாட்டலும்

பிற்பகல் 3 மணி : வெள்ளாளகுண்டம் துவக்கப் பள்ளிக் கட்டிட அடிக்கல் நாட்டல்

மாலை 6 மணி : சாரதா கல்லூரி நிகழ்ச்சி (சேலம்); இரவு 8 மணி : சேலம் ஜவனியர் சேம்பர் நிகழ்ச்சி.

குழுக் கூட்டங்கள்

சைதை வட்டம்

சைதை வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 16—7—67 காலை 10-மணிக்கு கத்திவாக்கம் (எண்ணூர்) கழகப் பணிமனையில் நடைபெறும்; வட்டப் பிரதிநிதிகள் தவருது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் சி. இராமலிங்கம் கேட்டுக்கொள்கிறார்.

குடியேற்றம் வட்டம்

குடியேற்றம் வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் 16—7—67 பிற்பகல் 2-மணிக்கு குடியேற்றம் தர்ணும்பேட்டை பி. எஸ். லாட்ஜ் மாடியில் நடைபெறும்; வட்டப் பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் பி. கே. முனுசாமி கேட்டுக்கொள்கிறார்.

ஆரணி

"ஆரணி நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 15—7—67 காலை 10-மணிக்கு சீனிவாச முதலியார் சத்திரத்தில் நடைபெறும்" என செயலாளர் கே. முருகரி அறிவிக்கிறர்.

நெல்லை மாவட்ட தி. மு. க. கிளைகளுக்கு

வேண்டுகோள்

"அறிஞர் அண்ணு அவர்களின் கட்டளைப்படி, தூத்துக்குடித் தூறைமுகத் திட்டத்தை யும்—சேலம் இரும்பாலைத் திட் டத்தையும் மத்திய அரசுக்கு வற்புறுத்த சூலை தங்கள் 23-ம் நாளை 'எழுச்சி நாளாக' மாவட்டமெங்கும் சிறப்புர — பேரூர்—நகர—பெருங்கர கிளைகள் அனைத்தும் தவருது கொண்டாடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்"

என, நெல்லை மாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிறர்.

பெங்களூரில் வள்ளுவர் விழா

பெங்களூர்த் தமிழ்ச் சங்கச் சார்பில் 19—7—67 மாலை 3-30 மணிக்கு ஒடுக்கத்தூர் மடத்தில் திருவள்ளுவர் விழாக் கொண்டாடப்படும்; காடி செல்வராய செட்டியார் தலைமையில் கருநாடக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.பாட்டீல் விழாவைத் துவக்கிவைப்பார்; பேராசிரியர் இலக்குவனார் தலைமையில் பட்டி மன்றம் நடைபெறும்; கன்னட மொழி அறிஞர் மாத்தூர் கிருட்டினமூர்த்தி வள்ளுவர் படத்தைத் திறந்துவைப்பார்.

புலவர் அறிவுடைநம்பி

நிகழ்ச்சிகள்

சூலை 15: காரைக்கால்; 16: நாகை; 22: அடைக்கப்பட்டி; 23: இராசிபுரம்.

நடக்க இருப்பவை

15--7--67

ஆரணி

தி. மு. கழகச் சார்பில் மாலை 6-மணிக்கு கொச் சப்பாளியம் தருமராசா கோயில் மைதானத்தில்; தலைவர்: எம். செயராமன்; பேசுவோர் : வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ., கே. பி. சுந்தரம், எம். கே. ஏழுமலை, தி. எத்திராசன்.

16--7--67

சிவகாசி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில், தலைவர் : ஆ. கந்தசாமி, பேசுவோர் : கா. காளிமுத்து பி.ஏ., மற்றும் பலர்.

பெங்களூர்

22-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு 7-வது கிராஸ் மாகடி ரோடில்; தலைவர் : வே. இளஞ்சேரன்; பேசுவோர் : டி. இராசதினமா எம்.எல்.ஏ., கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.ஏ., பி. சின்னச்சாமி, மா. மன்னர், எஸ். என். நாராயணன், ஜி. குப்புசாமி, என். லோகநாதன், எம். சி. கருணுகரன்.

மாயூரம்

சௌந்திரபாண்டியனர் படிப்பக ஐந்தாம் ஆண்டு விழா ; மாலை 7 மணிக்கு கூறைநாடு பாசிக் கடைத் தெருவில் ; தலைவர் : ஆர். இராமானுசம் எம்.சி ; பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன், என். கிட்டப்பா எம்.எல்.ஏ., கே. சுப்புவேலு எம்.பி., எஸ். கணேசன் எம்.எல்.ஏ., என். சோமசுந்தரம் எம்.எல்.ஏ., ஆர். ஜோசப் எம்.சி., பி. கிருஷ்ணமூர்த்தி, தம்பி தேவேந்திரன் எம்.சி.

மதுரை

சிங்கத் தமிழன் சின்னச்சாமி நினைவு மன்ற மு தலாவது ஆண்டு விழா : மாலை 7 மணிக்கு முகமணிபானையம் முதலாவது தெருவில் (முவிச்சால் ரோடு); தலைவர் : வி. சு. மணி; பேசுவோர் : எம். குமார், கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., எம். எம். முத்தரசு, பி. எஸ். இரத்தினம்.

திண்டுக்கல்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு பாரதி திடலில் ; தலைவர் : கே. ஏ. பாலகிருட்டினன் ; பேசுவோர் : தமிழ் மாறன், செ. தமிழ்த்துரை, மற்றும் பலர்.

நாடகம்

எழும்பூர் சரமுண்டி கிளப் ஐந்தாம் ஆண்டு விழாவையொட்டி 15—7—67 மாலை 6-30 மணிக்கு மியூசியம் கலிவரங்கில் அமைச்சர் திரு. மு. கருணுநிதி தலைமையில், 'மிஸ். வி. கெளரி' என்னும் நாடகம் நடைபெறும் ; திருமதி தயாளம்மா கருணுநிதி பரிசு வழங்குவார்.

ஓராண்டே முன்னேற்றக் கழகத்திற்கான திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆதிவாசிகளும், வெளிநாட்டினரும், அன்பு பரிசுகளாகவும் கொண்டு ஏழுதிரி அச்சகத்தில் (24, ஆண்டியப்ப நாயக்கன் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடுபவர்.

ஸ்டார்ஸ்-டிவிஸ்

லிமிடெட்.

1967 ஜூலை 17-ந் தேதி முதல் கதவடைப்பு ரத்து

நிர்வாகத்தினர் அறிக்கை

1967 ஜூன் 28-ந் தேதியன்று, எங்கள் தொழிற்சாலையி லுள்ள தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் கட்டுப்பாட்டை மீறி நடந்துகொண்டும், ஒரு மொத்தமான வேலைக்கு வராமலும் இருந்தனர்; இது ஒரு வேலைநிறுத்தம் போன்றிருந்தது. இந்தத் தொழிலாளர்கள் வெளியார் தூண்டுதலுக்கு உட்பட்டு இப்படி நடந்துகொண்டார்கள் என்று கம்பு எங்களுக்கு கல்ல காரணங்கள் இருக்கின்றன. இந்த நடவடிக்கைகளில் சில 29-ந் தேதியன்றும் மீண்டும் நடைபெற்றன. இதனுல் நிர்வாகத்தினர் கதவடைப்பு செய்யும் நிர்ப்பங்கம் ஏற்பட்டது.

ஜனியர்களில் மிகப் பெரும்பான்மையோர் மெம்பர்களாக உள்ள அங்கீகரிக்கப்பட்ட யூனியனைகார்கள் கதவடைப்பை நீக்குப்படி எங்களேக் கேட்டுக்கொண்டிருக்கிறர்கள். தங்கள் யூனியன் மெம்பர்கள் சகஜமாக வேலே செய்ய உறுதிகொண்டிருக்கிறர்களென்று அவர்கள் கூறுகிறர்கள். 1967 சூலை 12-ந் தேதியன்று சென்னே சர்க்கார் எங்களுக்கு அனுப்பிய கடிதமொன்றிலும், இப்பகுதியில் மீண்டும் தொழிலில் அமைதியை நிலைகாட்டுவதற்காகக் கடிய விரைவில் கதவடைப்பை நீக்குமாறு யோசனே கூறியிருக்கிறர்கள். தொழிலில் அமைதியைப் பாதுகாக்க உறுதி கொண்டிருப்பதாகவும் சர்க்கார் அறிவித்திருக்கிறர்கள்.

எனவே, 1967 ஜூலை 17-ந் தேதி காலை 7-45 முதல் கதவடைப்பை ரத்து செய்வதென்ற தங்களுடைய முடிவை நிர்வாகத்தினர் அறிவித்துக்கொள்ளுகிறர்கள்.

ஆயினும், நிர்வாகத்தினர் ஒரு விஷயத்தைத் தெளிவாக்க விரும்புகிறர்கள். தனிப்பட்ட தொழிலாளர்கள் மீது பைசலாகாமல் இருக்கும் ஒழுங்கு நடவடிக்கைகள் கதவடைப்பு நீக்கத்தினல் பாதிக்கப்படமாட்டா. பைசலாகாமல் உள்ள விசாரணைகளேத் துரிதப்படுத்தி, விரைவில் முடிவுகள் எடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நிர்வாகிகள் அறிவிக்க விரும்புகிறர்கள்.

சமீப காலம் வரையில் ஸ்டார்ஸ்-டி.வி.எஸ். லிமிடெட்டில் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே மிக கல்ல உறவுகள் இருந்துவந்திருக்கின்றன ; கதவடைப்பு நீக்கத்தின் பலனுக அந்த கலனுறவுகள் மீண்டும் ஏற்படும் என்று நிர்வாகத்தினர் கம்புகிறர்கள்.

சேர்மன்,
ஸ்டார்ஸ்-டி. வி. எஸ். லிமிடெட்